[1978 மார்ச் 4

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) தற்சமயம் மீதம் செய்ய வேண்டிய வேலைகளுக்கு டெண்டர் ஒப்பந்தம் செய்யப்பட்டு வேலை ஆரம்பிக்க வேண்டிய நிலையில் உள்ளது.

தகரை கிராமத்தில் பாசன ஏரி.

*வினா 383.—சின்னசேலம் திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சின்னசேலம் ஒன்றியம், தகரை கிராமத்தில் சென்ற ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகளின் கீழ் புதிய நீர்ப்பாசன ஏரி கட்டும் பணி தொடங்கப்பட்டு முடிவுறாமல் உள்ளதை முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

(ஆ) அதன் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) தற்போது வேலைகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) 20·50 லட்சம் ரூபாய்.

கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம்.

*வினா 384.—திரு. வி. கே. கோதண்டராமன்—திரு. க. கந்தசாமி: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கூட்டுறவுச் சட்டத்தை மாற்றி அமைக்கும் விஷயமாக ஏற்படுத்தப்பட்ட கே. சந்தானம் கமிட்டியின் ரிப்போர்ட்டு எந்த ஆண்டில் வந்தது ?

(ஆ) அதில் இதுவரை எத்தனை பரிந்துரைகள் அமுல்படுத்தப் பட்டுள்ளன ?

(இ) எஞ்சியுள்ள பரிந்துரைகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) 1969 ஆம் ஆண்டு மே திங்களில் திரு. கே. சந்தானம் தலைமையில் அமைக்கப் பட்ட குழு தன் அறிக்கையைச் சமர்ப்பித்தது.

[978 மார்ச் 4]

(ஆ) மொத்த பரிந்துரைகள் 359. அதில் 248 பரிந்துரைகள் இதுவரை அமுல்படுத்தப்பட்டுள்ளன. 84 பரிந்துரைகள் ஏற்கப்படவில்லை.

(இ) எஞ்சியுள்ள 15 பரிந்துரைகள் பரிசீலனையில் உள்ளன. இன்னும் 12 பரிந்துரைகள் மீது மேல் நடவடிக்கை தேவையில்லை என்று முடிவெடுக்கப்பட்டது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இப்போது எட்டு வருஷம் ஆகிறது. இந்த ரிப்போர்ட் வந்த பிறகு இப்போது அமுல்படுத்தப்பட்டதாகச் சொல்லக்கூடிய அந்தப் பரிந்துரைகள் அப்படியே அமுல்படுத்தப்பட்டனவா? அல்லது அதையும் மாற்றி திருத்தி அமுல்படுத்தப்பட்டதா? அதற்கான காரணம் என்ன? மற்றவைகள் எப்போது அமுல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே பரிந்துரைகள் செய்யப்பட்டது குறிப்பாக விவசாயம்—விவசாயம் பற்றிய கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு வங்கிகள், துறை அமைப்பு ஆலோசனைகள், கூட்டுறவுக் கல்விப் பயிற்சி மற்றும் விளம்பரம் போன்றவற்றைப் பற்றி ஆராய்ந்து அவற்றைச் செயல்படுத்துவதற்கான பரிந்துரைகள். அந்த அடிப்படையிலே ஏற்றுக்கொள்ளப்பட்டப் பரிந்துரைகள், நான் ஏற்கெனவே சொன்னதைப்போல ஒப்புக்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் எண்ணிக்கை 211. ஒத்திவைக்கப்பட்ட மற்றும் நிராகரிக்கப்பட்ட பரிந்துரைகள் 84; தொழில் துறைக்கு மாற்றம் செய்யப்பட்ட பரிந்துரைகள் 22; பகுதியளவு ஒப்புக்கொள்ளப்பட்டு அல்லது நிராகரிக்கப்பட்டவை 15.

பரிந்துரைகள் அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டனவா அல்லது மாற்றங்கள் செய்து ஏற்றுக்கொள்ளப்பட்டனவா என்று கேட்டார்கள். அதற்கான குறிப்பு என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் தேவையான விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு.கே. கந்தசாமி: தலைவரவர்களே, திரு.சந்தானம் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழு மறைந்த வி.கே.சி. போன்ற நிபுணர்களைக் கொண்டு அமைக்கப்பட்டு, அவர்கள் 'ரூரல் இன்டெப்ட்னஸ்' என்பதை மாற்றியமைக்க ஆக்க பூர்வமான திட்டங்களைக் கொடுத்திருப்பதாக அறிகிறோம். அவைகள் இவ்வளவு காலதாமதமாக நிறைவேற்றப்படுவதற்குக் காரணம் என்ன? எந்த ஆண்டிலிருந்து அவை நடைமுறைக்கு வருகின்றன? இன்னும் பல பிரிவுகளை நிறைவேற்றினால் கிராமப்புற மக்களுக்கு நன்மையாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. அதை ஆலோசனை செய்து, அந்தத் திட்டங்களையும் நடைமுறைக்குக் கொண்டு வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1978 மார்ச் 4

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, சந்தானம் குழு 1969 மே மாதம் 3 பகுதிகளைக் கொண்ட பரிந்துரைகளைச் சமர்ப்பித்தது. அந்த அடிப்படையில் இன்றைய தினம் அரசு அதில் பெரும்பகுதியை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்லப்பட்ட பரிந்துரை கூட்டுறவுத் துறை சட்டத் திட்டங்கள், அதன்கீழ் ஏற்படுத்தப்பட்ட விதி முறைகளை மாற்றியமைக்க வேண்டும் என்பது முக்கியமானது. அந்த அடிப்படையிலே கூட்டுறவுத் துறை சட்ட திட்டங்களையும் அதன்கீழ் இயற்றப்பெற்ற விதிமுறைகளையும் மாற்றுகின்ற முயற்சியில் இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது; தற்போது அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : எந்த சொஸைட்டியையும் கலைத்துவிட வேண்டுமென்பதற்கு எந்த விதத்திலும் பரிந்துரைகள் கிடையாது. அப்படி இருந்தும் இந்த சொஸைட்டிகளை எல்லாம் முன்பு இருந்த ஆட்சியினர் அவர்களுக்குச் சாதகமாகக் கலைத்து விட்டு நாமிநேஷன் செய்யப்பட்ட முறைகளில் அமைக்கப்படுவது நடைபெற்றது. அது விஷயமாக இன்றைக்கு இருக்கக்கூடிய அரசு என்ன செய்யப் போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, சந்தானம் குழுவினுடைய பரிந்துரைக்கும் கூட்டுறவுச் சங்கங்களை கலைத்ததற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. தமிழகத்தில் கூட்டுறவுத் துறையின் பல்வேறு சங்கங்களைக் கலைத்தது குடியரசுத் தலைவர் அவர்களின் ஆட்சி நடைபெற்ற நேரத்திலேதான் நடந்தது. அதற்கான காரணங்கள் ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, சந்தானம் கமிட்டியின் சிபாரிசின் அடிப்படையில், 60 சதவீதம் நாமினேஷன் முறையிலும் 40 சதவீதம் தேர்தல் முறையிலும் இருக்க வேண்டுமென்று இருக்கிறது. அதை மாற்றி ஒழுங்கான முறையில் அமைப்பதற்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற கருத்துக்களை ஒட்டி சட்ட திட்டங்கள் வரும்போது இவையெல்லாம் ஒழுங்காகச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஊராட்சிகளுக்கும் மக்கள் குழு அமைத்திருப்பதுபோல் கலைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மக்கள் குழு அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

1978 மார்ச் 4]

மாண்புமிகு திரு க. உரோ. எட்மண்ட் : தலைவரவர்களே, மூலக் கேள்வி சந்தானம் குழு அறிக்கை பற்றியது, மக்கள் குழு அமைப்பது பற்றியதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு வி. கே. கோதண்டராமன் : கூட்டுறவு நூற்பு ஆலை, கூட்டுறவுச் சர்க்கரை ஆலை போன்றவைகள் இருக்கின்றனவே, அவைகளுக்குத் தேர்தல் மூலமாகத்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சந்தானம் கமிட்டியில் கூறப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தும் இதுவரையில் நாமினேஷன் முறையில் செய்யப் பட்டு வருகிறது. இந்த அரசு இதுபற்றி ஆய்வு செய்து அது தேர்தல் முறையிலே எடுக்கப்படுகின்ற நிலைமையினை அமுல் படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : தலைவரவர்களே, என்றாவது ஒருநாள் தேர்தல் நிச்சயமாக வந்துதான் ஆகவேண்டும்.

* வினா 385— திரு. ப. சந்திரன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கூட்டுறவு , சட்டம், அதன்கீழ் பிறப்பிக்கப்பட்ட விதிகளை திருத்தியமைப்பதற்கென Palani என்பவர் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழுவின் பணி எந் நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு க. உரோ. எட்மண்ட்: தமிழ்நாடு கூட்டுறவுச் சட்டம் அதன் கீழ் பிறப்பிக்கப்பட்ட விதிகளை திருத்தியமைப் பதற்கான பரிந்துரைகள், கூட்டுறவு பதிவாளரிடமிருந்து வந்துள்ளன. அவை அரசின் தீவிர ஆலோசனையிலும், ஆய்விலும் உள்ளன.

திரு ப. சந்திரன் : தலைவரவர்களே, திரு. பழனி தலைமை யிலே ஒரு நபர் குழு அமைக்கப்பட்டதா? அதில் என்னென்ன பரிந்துரைகள் செய்யப்பட்டன என்று அறிய விரும்புகிறேன். அந்த விதிகள் அமுலுக்கு வந்துவிட்டனவா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு க. உரோ. எட்மண்ட் : தலைவரவர்களே, கூட்டுறவுச் சட்டதிருத்தங்களை ஆராய்வதற்கும், அவற்றில் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கும் ஒரு குழு அமைக்கப் பட்டிருக்கிறது. பழனி என்பவர் தலைமையிலே ஒரு நபர் குழு அமைக்கப்படவில்லை. பழனி என்பவர் அதிகாரியாகத்தான் அந்தக் குழுவிலே பணியாற்றி வருகிறார்.

திரு செ. சிவசாமி : கூட்டுறவுச் சங்கங்களுக்கு போர்ட் ஆப் டைரக்டர்களின் காலம் காலாவதியான பிற்பாடு புதிதாக இன்னும் டைரக்டர்கள் போடவில்லை. எப்போது போடப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.